723

உ

பு எண் — M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 தூநதலம், மாம்பாக்கம்; செய. ஆடி. க 16—7—54 தளிர்-39

ஓவா துருக அருளாயே!

"அடியார் சிலருன் அருள் பெற்றார் ஆர்வங் கூர யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியே னுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே ஓவா துருக அருளாயே'

(திருவாசகம்)

தன் கை தன் கண்ணைக் குத்திவிட்டால் என்ன செய்வது? கையைக் குறைத்து விடுவதா? யாரேனும் செய்வார்களா? அல்லது ஒருப்படுவார்களா? கருணையே உருவமாகிய இறைவன் மன்னிப்பவன் என எண்ணி மக்கள் மேலும் மேலும் பாவஞ் செய்து செய்து, இன்னொரு பக்கம் அது குறித்து முறையிட்டு முறையிட்டு வந்தால்; அப்பயனால் பாவம் தேயுமா? வளருமா? பெருத்த ஐயப்பாடுதான். இறைவன் குற்றமாகவும் குணங்களாகவும் இருப்பதனால் நல்லவை தீயவை செய்யினும், அவனருள் என்று எண்ணி நல்லவை போற்றி, குற்றத்தை நினைந்து நினைந்து இனியும் அக்குற்றம் நேரா வழி மனந்திருப்பி அழுவேனாகல் வேண்டும். மனந்திரும்பாமல் முறையிடுவதும், அழுவதும் போலியாக முடிந்துவிடும். எங்கும் நிறைந்து;எல்லாம் உணர்பவன் ஆண்டவன் அவனுக்குப் பொய்ம்மை மெய்ம்மை நன்கு தெரியும். பொய்ம்மை முறையீடும் அழுகையும் ஒருநாளும் மன்னிப்புப் பெறமாட்டா. அவை மேலும் மேலும் பாவத்தைப் பெருக்கிக் கொண்டே செல்லும். பொய்ம்மை, நல்லறிவால் மெய்ம்மையாகத் திரும்புதலும் உண்டு.

பாவஞ் செய்பவன் மனிதன். எனவே, அவனே பாவ அறிக்கை செய்தல் வேண்டும். பொறுப்பு அவனுடையதல்லவா? பொறுப்பில் மெய்ம்மை கலந்தால், பாவத்துக்கு அஞ்சும் நெஞ்சம் ஏற்படும். அந்நெஞ்சு பெற்றோன் வாழ்க்கையில் வெற்றி காணுவான். ஆதலின், அவன் நெஞ்சம் புதுப் பாவத்தை நாடாது; பொறி புலன்களில் வீழாது; குறும்பு செய்யாது; இறையருளில் வேட்கை கொள்ளும்; தியானத்தில் ஈடுபடுத்தும்.

பாவ நீக்கத்திற்கென உலகில் கோலப்பட்ட முறைகள் எண்ணிறந்தன. அவைகளுள் சிறந்ததும் எளியதுமாக இருப்பது முறையீடு எனவே, மனந்திரும்பிய முறையீட்டினின்று எழும் அழுகையே இறைவனின் ஈடிலா மன்னிப்பைப் பெற்று பாவத்தைப் போக்கும் ஆற்றல் வாய்ந்தது.

மனந்திரும்பியவர்கள் தமது பாவங்களை எண்ணி இறைவனை நோக்கி அழுது முறையிட்டு மன்னிப்புப் பெற ஒரு சிறிதும் அஞ்சார். அவர்களை அறியாமலே அவரது வாய் பாவச் செயல்களை முறையிட்ட வண்ணமிருக்கும். அம்முறையீடுகள் மலையெனவும் கடலெனவும், குவிந்தும் பரந்தும் கிடக்கின்றன.

"யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

'மூர்த்தி'

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ. 4	0	0
வெளி நாடு	ரூ. 6	0	0
தனித் தாள்	0	1	0

ஆயுள்—

கையொப்பம்	ரூ. 100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	செய, ஆடி,	தளிர்
6	16-7-54 வெள்ளி.	39

சிந்திக்க வேண்டும்

திரு, R. G. சேனநாயகா இலங்கை அரசாங்க அமைச்சராக இருந்து அண்மையில் அப்பதவியை விட்டு வெளியேறியவர். வெளியேறியதன் காரணம் 'கொத்தலாவலை அரசாங்கம் அமெரிக்காவுக்கு அடிபணிந்துவிட்டதே எனவும் அமெரிக்க–இலங்கை கூட்டுக்கு, சீனா–இலங்கை வணிக ஒப்பந்தம் மீற முற்பட்டிருப்பதும் திரு கொத்தலாவலை அண்மையில் அமெரிக்காவுக்கு அரசாங்க அழைப்பின்பேரில் செல்லுவதுமே' என எடுத்துக் காட்டினார். இந்நிலை முன்கூட்டியே இலங்கைபால் எதிர்பார்க்கப்பட்டதே. மேற்கூறிய நெருங்கிய தொடர்பினால்தான் இந்தோசீனாவுக்குச் செல்லும் இராணுவ விமானங்களை இலங்கையில் இறங்க அனுமதித்ததும் பின்னர் அந் நிகழ்ச்சி தங்கட்குத் தெரியாமலே நடந்ததெனக் கூறியதும் எண்ணிப்பார்க்க வேண்யடி தொன்று.

இலங்கை–சீனா வணிகத் தொடர்பை அறவே நீக்கிவிட அமெரிக்கா நீண்ட நாட்களாகவே துடித்துக்கொண்டிருந்தது. அவா முற்றுப்பெறும் காலம் வந்தே விட்டது. கொத்தலாவலை அமெரிக்கா செல்கின்றார். அவருக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் தருவதாக அமெரிக்கா உறுதியளிப்பதோடு, கொடுக்கவும் செய்யும். இலங்கை அமெரிக்கா தோழமை வளர்ந்து உறுதிப்படின் விளைவுகளைப் பற்றிக் கேட்க வேண்டியதேயில்லை. மேற்கே பாகிஸ்தான் அமெரிக்காவலையில் சிக்கிக்கொண்டது. இலங்கை சிக்கும் நிலையிலிருக்கிறது. நடுவே உலக அரங்கில் தன் மதிப்பை இழக்காது தலைநிமிர்ந்து, போற்றப் பெறும் நம் இந்தியா இருக்கிறது. சுற்றிலும் வளையமிடுகிறது அமெரிக்கா. இந்தியா முன்னேற்பாடுகள் மூலம் விழிப்பாக இருக்கும் நிலை நெருங்கிவிட்டது.

இந் நெருக்கடி நிலைமையில் ஆசிய முதலமைச்சர்கள் (பிரதமர்கள்) மாநாடும் இலங்கை போன்ற மண்குதிரைகளை நம்பி நடவடிக்கை என்னும் ஆற்றில் இறங்குவதும் எவ்வளவு தொலைவுக்குப் பயனளிக்கும் என்பதையும் நாம் மிகவாகச் சிந்திக்க வேண்டும்.

மேலும், இலங்கை அரசு டில்லி ஒப்பந்தத்தையும் மீறி 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று இந்தியரை வெளியேற்றும் பணியில் என்னென்ன சூழ்ச்சிகளைக் கையாள முடியுமோ அவையெல்லாம் செய்து வருவது ஒருபுறமிருக்க வெளியாட்களை ஏவி "திருசிங்கலாபெராமுனு" என்ற ஒரு புது இயக்கம் தோற்றுவித்து அதன் மூலம் இந்தியர் எதிர்ப்பு, இந்தியக் கடை மறியல் முதலிய வேலைகளைச் செய்து வருகின்றது. இது பற்றி அரசியலாருக்கு அறிவிக்கப்பட்டபோது. 'அந்நாதிரி வேற்றுமை மனப்பான்மை ஒழிக்கப்படவேண்டும். சமாதானம் நிலவ நாங்கள் பார்த்துக்கொள்வோம்' என மழுப்பி விட்டனர். ஆனால், செயலளவில் வகுஞ் செய்யவில்லை; செய்ய முற்படவுமில்லை. இம்மறியல் தற்போது தீவிரமாக இருக்கிறது.

கொழும்புக்கு அண்மையிலுள்ள ஹோரணை பாணந்துறை முதலிய ஊர்களில் இந்தியக் கடைகளில் வியாபாரம் நடக்காமல் மேற்கூறிய இயக்கம் மிக்க இழிந்த நிலையில் வேலைசெய்து வருகிறதாம். வியாபாரிகள் இதனால் பல நாட்களாக வியாபாரமின்றி வருந்துவதோடு, வியாபாரப் பொருள்கள் எல்லாம் கெட்டுப் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் நட்டமேற்பட்டு வருகிறதாம். இந்த நிலை முற்றி இந்தியர் தங்கள் முதலீடும் பொருளும் இலங்கையில் கோடிக் கணக்கில் இருப்பதால் அவைகட்குப் பாதுகாப்பும் உத்தரவாதமும் வேண்டும் என்பதை நினைந்து வெகுண்டெழுவார்களானால் என்ன நேரிடும் என்பதை இலங்கை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். சிந்திக்கும் ஆற்றல் இல்லையேல்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

சாதல் அஞ்சேன்.....!

(மூர்த்தி)

உயிருக்கு அறிவு விளங்குவதற்காகவே இறைவனால் உடல் அளிக்கப்பட்டிருக்கிறது. உடல் நிலை தளரினும் கருவிகள் கெடினும் உணர்வு குன்றுவது ஒவ்வொருவரும் தாமே அனுபவித்து அறிந்த உண்மையாம். இதனாலேதான் சிவஞான போதம் "மாயாதனு விளக்கம்" என்று கூறுகின்றது உயிருக்கு அது எடுத்த உடலின் இயல்புக்கு ஒப்பவே அறிவு இருக்கும். உடலும் உயிரும் சேர்ந்துள்ள ஒற்றுமை நயத்தினால் அவ்விரண்டும் ஒன்றாகவே தோன்றினாலும் அறிவுடைய உயிரும், அறிவற்ற உடலும் வேற்றுமை நயம் கருதினால் வேறு வேறே என்பதனை,

"ஒற்றுமை நயத்தின்
ஒன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின்
வேறே உடலுயிர்"

என நன்னூலார் மிக அழகாக எடுத்துக்கூறினர்.

பசு உடலில் இருந்து தன் கன்றினைப் பேணிய உயிர், அப்பசு உடல் நீங்கிவேறு புலியுடல் எடுப்பின் தனது பழைய உணர்வு மறந்துபோய் எடுத்திருக்கும் புலியுடலின் தன்மையால் எவ்வாறு அக் கன்றினையே கொன்று தின்று மகிழுமோ அதுபோலவே தான் ஒருவரை விட்டு ஒருவர் இறக்க நேரினும் மறுபிறப்பு வருமாயின் ஒருவருக்கொருவர் அவரவரன்பினை எங்கே மறக்க நேர்ந்து விடுமோ என்ற அச்சம் கருத்தொருமித்த, நலம் பல சான்ற, கனிந்த காதலர்கள் பால் நிகழ்வது பொருத்தமுடையதே. இவ்வாறான அச்சம் மறுபிறப்பிலும் அவனையே தன் காதலனாகப் பெறுதல் வேண்டும் என்ற காதலியின் விருப்பத்துக்கும் அடிப்படையாகின்றது. இக் கருத்தினையே "பின்னும் பிறப்பான் அடுப்பினும் பின்னும் துன்னத்தகும் பெற்றியர்" எனத் தலைவனது மேன்மையைத் தோழி கூறுவதாகத் திருக்கோவையாரில் மணிவாசகப் பெருமான் வலியுறுத்துகின்றார்.

இராமன்பால் சீதை கொண்டிருந்த ஆரா அன்பினை உலகம் இன்னும் கூறிக்கொண்டிருக்கின்றது. அசோக வனத்தில் சிறையிருந்த சீதை சூளாமணி ஈந்த அனுமனிடம் 'ஈண்டு நானிருந்தின்னுயிர் மாயினும் மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத் தீண்டலாவதோர் தீவினை தீர்வரம், வேண்டினாள் தொழுது என்று விளம்புவாய்' என்று கூறியது இங்கு நினைவுகூறற்பாலது. மறுபிறப்பிலும் இராமனுக்கே வாழ்க்கைப் படல் வேண்டும் என்னும் சீதையின் விருப்பத்தினைக் கம்பர் எவ்வளவு அழகாகத் திருந்திய முறையில் கூறுகின்றார்.

தலைவன் தலைவியர்பால் உள்ள இத்தகைய நேய மனப்பான்மை ஆண்டான் அடிமைத் திறத்தினும் உண்டு. 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவா திருக்க வரந் தரல் வேண்டும்' என்று அப்பரடிகள் வரம் வேண்டுகின்றார். மறுபிறவியில் இறைவன் பெயரை மறந்து விடுவோமோ என அஞ்சிய அவர்.

'துறக்கப்படாத வுடலைத் துறந்து
வெந்தூதுவரோ
டிறப்பன் இறந்தால் இருவிசும்
பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தாற் பிறைபணி
வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலேவென்
றென்னுள்ளங்கிடந்து மறுகிடுமே'

என்ற திருப்பாட்டினாலும் பிறவி நேரினும் மறவாமை வேண்டி அதனை உயிர்கட்கும் அறிவுறுத்துதல் காண்க.

மாண்டு மாண்டு பிறந்து பிறந்து உழலினும் இறைவன் திருவடியின்கண் அன்பு மறவாதிருக்க வேண்டுமென்பதைத் திருவாசகம்:-

"வேண்டும் நின்கழற்கணன்பு......மாண்டு மாண்டு வந்து மன்னநின் வணங்கவே" என்று வலியுறுத்துகின்றது. எனவே, "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால், மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" இறைவனைக் காணும் பேறு உண்டாயின் எத்தனை முறை மனிதப் பிறவி எடுப்பினும் வேண்டப்படுவதே என்று பறைசாற்றுகின்றார் நாவின் வேந்தர்.

என்னே அன்பின் திறம்! ஒருநாள் இனிய மாலை நேரம். தலைவியும் தோழியும் எதிரெதிராக உட்கார்ந்திருக்கின்றனர். தலைவி அடிக்கடி பெருமூச்செறிகின்றாள். வருந்திய தோழி, 'அன்னாய்! வினைமேற் சென்ற நம் காதலர் குறித்துச் சென்ற நாள் கடந்தது, வந்திலர் இருப்பி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

'திறனறிந்து சொல்லல்'

'தோழன்'

திறனறிந்து, பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து சொல்லும் ஆற்றல் உடையதாலேயே திருக்குறள் இறவா நூலாகத் திகழ்கின்றது. குறளை நாம் படிக்கவில்லை; ஆனால் குறள் நம்மோடு பேசுகிறது. உருக்கமாக ஆனால் உற்சாகமாக, வேடிக்கை, விந்தையாக ஆனால் வேட்கை கொள்ளும் வகையாக, ஆவேசமாக ஆனால் அல்லல்படா வகையாகப் பல நூற்றாண்டுகளாக, பேசிக்கொண்டே, வாழும் வகையைப் போதிக்கும் இந்தக் குறளைக் கடைப் பிடிப்போர் எவ்வளவு பேர்?

அறம் இம்மை, மறுமை, வீடு இம் மூன்றினையும் அளிக்க வல்லது. இம்மை வாழ்வுக்கு ஒளியம், புகழும் இன்பமும் கூட்டி மறுமைக்கு உறுதி சேர்த்து வீட்டிற்கு வழியாகவும் நிற்கிறது. "அறவழி நின்மின்! அறவழி நின்மின்! என ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்க் கதறிக் கதறி உரைத்து வந்த ஆன்றோர்கள் எத்தனைபேர்! அறவழி நிற்பதிலே மனித சமுதாயம் அடைந்த தோல்வியின் பயன் தான், இன்றைய மனிதனுக்கு, அன்றாட வாழ்வில் ஏற்பட்டிருக்கும் அல்லல்கள், துன்பம், துயரம், கவலை, கவனிப்பாரற்ற ஆதரவில்லாத நிலை, கல்வி பெற முடியாமை, நோய்களில் பெருவாரியாக மடிதல், பசி, பஞ்சம், பட்டினி, போர்கள், பிணக்குகள், ஏன்? அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு வரை வளர்ந்து பாழ்நிலைக்கு ஏதுவாய் நின்றிருக்கின்றது.

"அறவழி நிற்பதா? மனிதனுக்கு வேறு வேலை இல்லையா? உலகந் தோன்றிய அந்த நாள் முதல் தானம் செய்யுங்கள், தவம் செய்யுங்கள் இல்லறம் விடுத்துத் துறவறம் பூண்டு காட்டிற் சென்று கடவுளைக் காணுங்கள் என்று பயனில்லாமல் கதறிப் பதர் வாழ்விலே கழிந்த (துறவிகளின்) சந்நியாசிகளின் புலம்பலில் இதுவும் ஒருவரி போலிருக்கிறது. என்று சிந்தனை செய்யும் நண்பர்களின் சிரிப்பொலி கேட்கிறது. நாட்டின் எதிர்காலம் நோக்கி நிற்கும் இளைஞர்கள் இஃதேதோ புரியாத ஒன்று என்று பக்கங்களைப் புரட்டிப் புரட்டி மூடி வைத்துவிட்டுப் போக முயற்சிப்பதுந் தெரிகிறது.

நம் வள்ளுவப் பெருந்தகை அஞ்ச வேண்டாம். அறவழி நிற்பது மிக்க எளிது. காட்டிற சென்று கடுமையான நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டா. பொருளைப் புறக்கணித்து மலைக்கவோ, திகைக்கவோ, மயங்கவோ வேண்டாம். பின் எப்படி?

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

என்கிறார். எவ்வளவு எளிது பாருங்கள். அறம் என்று சொல்லப்படுகிறதே அது, இவ்வளவே இவ்வளவுதான். மனத்தைத் துளிகூட அழுக்கில்லாமல் வைத்துக் கொள்ளுங்கள் அவ்வளவு போதுமானது.

பிறமனிதன் ஒருவனைக்கண்டு அஞ்சுதற்குக் காரணம் எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுதே மனத்தில் சிறிதேனும் அழுக்கு சேர்ந்துவிட்டது என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். ஞானிகள் எல்லாம் "இதோ இந்த உலகம்முழுவதும் எங்கள் வீடு. வானக்குடையின் கீழ் இந்த வையம் முழுதும் எப்படித் திறந்து கிடக்கிறதோ அப்படியே எங்கள் மனமுந் திறந்து கிடக்கிறது. இதில் இருட்டுக் காட்டுப் புதர்கள் ஒன்றும் இல்லாமல் பாது காத்து வருகிறோம். ஏனென்றால், அப்படி இருந்தாலல்லவோ கொடும் காட்டு விலங்குகளாகிய பயங்கரங்கள் புகுந்து மறைந்துறைவதன் வசதி எற்படுகிறது" என்று கூறுகின்றார்கள்.

வானவெளி போன்ற நிர்மலமான உள்ளத்தைப் பெறுங்கள். ஒளித்து வைப்பதற்கென்று உங்கள் உள்ளத்தில் ஒன்றும் இல்லை. அது திறந்து கிடக்கட்டும். அப்படித் திறந்து கிடக்கும் இதயத்தைப் பெற வழி? மிக எளிது என்னும் பான்மையில் மிக்க விழிப்பு மிகுந்த அனுபாசமாக அறத்தைப் பற்றிக் கூறி, மற்றவை எல்லாம்—'நான் நல்வழி நிற்கிறேன், என்று சொல்லிக் கொள்வது, வேடம் தரித்துப் பாசங்கு செய்வது; எல்லாம் வெறும் ஆரவாரமேயாகும். என்று கூறியவர் அடுத்த பாட்டில்.

''அழுக்காறு அவாவெகுளி
இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

எனச் சொல்கிறார். பிறருடைய செல்வம் முதலானவை கண்டு பொறாமைப் படவேண்டா. புலன்களின் மேல் செல்லும் ஆசைகொண்ட மனத்தராகாதீர்கள். பொறாமை ஆசை ஆகியவற்றின் காரணமாக உண்டாகும் சினத்திற் காளாகி விடாதீர்கள். அதுபற்றி வரும் கடுஞ்சொல்லைக் கடிந்து ஒதுக்குங்கள்; போதும், நீங்கள் அறவழி நடப்பவாவீர்கள் என்கிறார்.

சொல்லுந் தன்மையைக் கூர்ந்து பார்த்தால் மனத்தின் கண் மாசிலராகுங்கள் என்று சொன்னபோது எழுந்த அந்த எளிமைக் குரல் அல்ல நம் காதில் ஒலிப்பது. கொஞ்சம் அழுத்தம், சொல்வதில் எளிமை நிறைந்த தாக்குதல். பொருளில் கடினம் இவற்றை எளியவராகக் கொண்டு செயல்முறையில் கடினமானவையாய் இருந்தபோதிலும் துணிவுடன் பின்பற்றுங்கள் என்னும் பான்மை எழுகின்றதன்றோ!

பொறுமை வரும்போது பிறரைக் கெடுக்கும் எண்ணம் ஒழித்துச் சுய ஆக்கம் பெறும் வழியை நோக்கி முன்னேறுதல் அவசியம். அடக்க வியலாத ஆசைகள் மனத்தினை அலைக்கிறபோது சற்றுத் தெளிவுடன் சிந்தித்தல் வேண்டும். அறத்தின் வழியாக எய்தக்கூடிய இன்பங்களை உணர்வோடு அனுபவித்தல் நல்லது. உண்மை அறிவு மறைக்கப்படாதவாறு கவனித்துக் கொண்டு அனுபவித்தல் அதனினும் நலலது. இன்பத்தில் ஆழ்ந்துவிடாதிருந்தால் வெகுளியும் இன்னாச் சொல்லும் எழக் காரணமே இல்லை.

எளிதே என்னும் வழக்கில் சொல்லியபோதிலும், கடுமையாகத் தோன்றுகின்றதே என்று நம் உள்ளுணர்வு கொஞ்சம் அஞ்சுவதாகத் தோன்றுகின்றதல்லவா....? சொல்லும்போதே கேட்போன் கண்களில் இந்த ஏக்கத்தின் சாயை படர்வதைக் குறிப்பாக உணர்கிறார் பேராசிரியர் வள்ளுவர். உடனே,

"அறத்தா றிதுவென
வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான்
இடை"

என்று வேடிக்கை காட்டுகின்றார். அதோ பாருங்கள் சிவிகையைத் தூக்கிக்கொண்டு போகின்றார்கள். சிவிகை ஏறுவோனையும், தூக்குவோரையும் காணுங்கள். இந்த வேறுபாடுதான் தர்மத்தின் வழி நடப்போனுக்கும் நடவாதார்க்கும் இடையில் இருப்பது. வாழ்க்கை என்னும் பல்லக்கில் போக விரும்புகின்றீர்களா? அன்றி அதைச் சுமந்து செல்ல எண்ணுகின்றீர்களா? நீங்களே சொல்லுங்கள் எது இன்பம்? எந்த இன்பம் வேண்டும்? எல்லோரும் வாழ்வைத் துயருடன் அழிக்காமல் இன்பத்தோடு பயனுடையதாய்க் கழிக்கத்தான் விரும்புவீர்கள். என்றால்.......

"வீழ்நாள் படாஅமை
நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

அறவழி நிற்கும் ஆசை ஒருபுறமும் அதன் கடினம் என்னும் அச்சம் மறுபுறமுமாக அலைய வேண்டாம். சுலபமான வழி இருக்கிறது.

ஒரு நாளைக்கூட விடாமல் எல்லா நாளினும் நன்மை செய்து வரல்வேண்டும் இயன்ற அளவு போதும். அத்துடன் எவ்வளவு தூரம் குற்றங்களை ஒதுக்கித் தள்ள இயலுமோ அவ்வளவு ஒதுக்கல் நல்லது. அம்முயற்சி எவ்வளவு பெரிய பயனை அளிக்கப்போகிறது என நினைத்துப் பார்த்தால் இந்தக் கடமை ஒரு பெரிதாகவே தோன்றுது. இந்த சிறிய முயற்சியே பிறவித் துன்பத்தை அடைக்கும் கல்லாக உதவும். எவ்வளவு உற்சாகமாகக் கூறிவிட்டார். அது மட்டுமா?

அறத்தினால் வருவதே இன்பம். மற்ற எல்லாம் துன்பமாவதோடு பழியுஞ் சேர்ப்பதாகும் என எச்சரிக்கின்றார்.

"செயற்பாலதோரும் அறனே [ஒருவற்கு
உயற்பால தோரும் பழி."

என்று முடிபாகக் கூறி முத்தாய்ப்பு வைக்கின்றார். எனவே, நாம் செய்ய வேண்டுவது அறமே என்பதும் தவிர்க்க வேண்டுவது பழி விளைவிக்கும் செயல்களுமே என்பதாம்.

மிகக் கடினமான ஒரு பொருளை எடுத்துக்கொண்டு அது எளிது; மிக மிக எளிதே யாயினும் சிறிது கடினமாகத்தான் இருக்கும். ஏனெனில் மிகப் பெரிய ஒன்றைச் சாதிக்கப் போகும் ஒருவன் கொஞ்சம் முயற்சி செய்துதான் ஆகவேண்டும்; துன்பப் படவும் வேண்டும் என்று கூறி, வேடிக்கை—விந்தை காட்டி—செய்து, கேட்பவர்களின் மனத்தில் படும்படிச் செய்து எல்லோரும் வாழ்வைத் தெப்பம்போல் உதவச் செய்து கொள்ளவேண்டும்; சுமையாக்கிக் கொள்ளக்கூடாது. அறத்தால் வருவதே இன்பம் என்று கூறி ஆதலின், அறவழி நின்று பெருநெறி எய்தல் வேண்டும் என முடிக்கின்றார்.

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னும், வருந்தற்க; கவலை உயிர்; குடிக்குங் கூற்றுவன். எவ்வாறேனும் ஒருவாறு கவலை நீங்கி மகிழ்வோடிருக்க முயற்சித்தல் நலம்' என்றனள்.

அது கேட்ட தலைவி. தோழீ! என்னைக் கொண்டானோடு கூடியிருந்த காலத்தில் பணைத்துத் தள தளத்து இருந்த தோள்கள் கவினிழந்து வாடின. அவர் மீண்டு வருவதாகக் குறித்துச் சொன்ன நாளும் கடந்தது. அவர் வருவார் வருவார் என்று எதிர் நோக்கி வழி மேல் விழி வைத்து இமையாதிருந்ததால் கண்களும் ஒளியிழந்து மங்கின; உயிர்த் துணையாயிருந்த அறிவும் மயங்கி நீங்கத் தலைப்பட்டது. என்னுடைய மனநோயும் பெருகலாயிற்று. போதாதென்று கூற்றம் போன்ற இம்மாலைக்காலமும் நாளும் போந்து துன்புறுத்துவதாகிறது. உடல் நைந்து இறந்து படுவேன் என நீ எண்ணுகின்றனை. இறப்பினுக்கு நான் அணுவளவேனும் அஞ்சவில்லை. எனினும் இறந்து மறு பிறப்பு வரின் இப்போதுள்ள அறிவே அப்போதும் இருக்குமோ? இருக்கும் என்றால் இதற்கு முந்திய பிறவியின் நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வரவேண்டுமே; வந்ததில்லை. ஆதலின் மறு பிறவியில் இப்பிறப்பின் எண்ணம் எழாது என்பது பெறப்படுகின்றது. எனவே, என் கணவனை மறந்து விடுவது உறுதி. இப்போது அவர்மேல் வைத்துள்ள அன்பு அப்போது மறக்க நேருமே என்பதுதான் என் கவலை. பிறவிதோறும் என் தலைவனை மறவாமல் உடன் வாழ்தல் உறுதியானால் இறந்து படுவதற்கும் இறந்து பிறந்து வருவதற்கும் அஞ்சேன்" என்று கவலையும், வீரமும் கலந்து தோன்றக் கூறினள். ஆ! எவ்வளவு இனிய குறிக்கோள். தலைவியின் குறிக்கோளை விளக்கும்பாட்டு வருமாறு:—

"தோளும் அழியும் நாளும்
சென்று என
நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்
கண்ணும் காட்சி
தவ்வின என் நீத்து.
அறிவு மயங்கிப் பிறிதாகின்றே
நோயும் பெரும் மாலையும் வந்தன்று
யாங்கா குவவென்கொல்
யானே; ஈங்கோ
சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்புப் பிறிதாகுவது; ஆயின்
மறக்குவென் கொல்என் காதலன்
எனவே"

(நற்றிணை 397)

இது போன்று உள்ள உறுதியுடைய பெண்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிப் பெண்ணுலகு நலம் பெறுமாக.

"இம்மைப் பிறப்பிற்
பிரியலம் என்றேனக்
கண்ணிறை நீர்கொண் டனள்"

(குறள்)

அறிஞனும் - - - - - அரசியும்

மாணிக்கவல்லி

சகப்பிரியரையும், அவருடைய நாடக நூல்களையும் அறியாதார் எவருளர்! அவர் நாடக ஆசிரியர்மட்டு மல்ல ஒரு சிறந்த நடிகருங் கூட, ஒருகால் இங்கிலாந்தில் தாம் எழுதிய நாடகங்களுக்குள்ளே ஒன்றின் காப்புடைத் தலைவன் வேடம் புனைந்து தக்கார் முன்னிலையில் நாடகம் நடத்தி வந்தார். சகப்பிரியரின் வரம்பிகந்த கல்வித் திறத்தினைக் கேட்ட இங்கிலாந்து அரசி எலிசபெத் அம்மையார். அவரது நடிப்புத் திறனை நேரில் கண்டு களிப்பெய்தும் பொருட்டு நாடகத்தினுக்குப் போயிருந்தனர்.

நாடகம் நடந்துகொண்டிருக்கிறது. புறத்தே கொண்ட அரசநிலைக் கேற்றபடி அகத்தேயும் அந்நிலையை உடையவரா என்பதனை ஆராய முற்பட்டனர் அரசியார். அதுபோழ்து அரச வேடம் புனைந்த சகப்பிரியர் ஏவலாளனிடம் ஏதோ வேலையைக் குறிப்பிடுகின்ற நேரம். அந் நேரத்தில் அரசியார் தம் கைக்குட்டையை சகப்பிரியர் பார்க்க அவர் அருகில் நழுவ விட்டார். அவ்வாறு விழுந்த கைக்குட்டையை உடனே எடுத்துக் கொடாவிடில் அரசியாரை அவமதித்ததாவதோடு அரச பக்திக்கும் குறைவாகும். உடனே குனிந்து எடுத்துக் கொடுக்கலாமெனில் அப்போது நடித்துக்கொண்டிருக்கும் அரச நடிப்புக்கும் பொருந்தாத செயலாகும். ஒருநொடியில் அவரது நிலை இருதலைக் கொள்ளி எறும்புபோலாயிற்று. எனினும், அவரது கல்வித் திறன் உற்ற துணைவனாயிற்று. உடனே அவர் தாம் கட்டளையிட்டுக் கொண்டிருந்த ஏவலாளியை நோக்கி,

'எங்கட் டளையை யியற்றுதன்
முன்னென்
தங்கைக்கைக் குட்டையைக்
தாமதி யாதெடு'

என்றலும், ஏவலாளி எடுத்துத் தந்த கைக்குட்டையை வாங்கி அரச வேடத்திற்குத் தக்கவாறு செருக்குடன் 'தங்காய் இதோ நின் கைக்குட்டை' எனக் கொடுத்தனர்.

அரசியாரும் பிறரும் சகப்பிரியரைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

'கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை'

இனிய பொழுது

-4-

நா. சுப்பிரமணியன்.

'ஓ நீங்களா வணக்கம் வாருங்கள் இப்படி....... இப்படி.......'
'இருக்கட்டும் தம்பி என்ன அம்மா, அண்ணா ....'
இருக்கிறார்கள். அம்மா அதோ வருகிறார்கள்'
'வணக்கம் அம்மா.'

'வணக்கம் ஐயா வாருங்கள் வந்து நீண்ட நேரமாயிற்றோ. இனிப்பு நீர் அருந்துகிறீர்களா?'
'வேண்டாம் அம்மா. பெரிய தம்பி இல்லையா?'

'பெரிய தம்பியும் அதோ வருகிறான். அவனுக்கு உடல் நலமில்லை சின்ன தம்பியும் நானும் அவனுக்கு வேண்டுவதை அவ்வப்போது தாழமற் செய்து வந்தும்.......'

'அடடா! பெரிய ஐயாவா! வணக்கம் வாருங்கள் ஏது இவ்வளவு தொலைவு. ஏதேனும்.......'
'அதெல்லாம் ஒன்றுமில்லை தம்பி இன்று ஞாயிற்றுக்கிழமைதானே ஓய்வு நாள் அவனே ஆவனே என்பதைவிட சிவனே சிவனே என்று காலத்தை நல்லதாகச் செய்யலாம் என்றுதான்' என்று புன் முறுவலுடன் கூறினார் எதிராசனார் அவர்கள் 'கரும்பு தின்னக் கூலியா? ஐயா! கடந்த கிழமை நால்வராக இருந்து உரையாடினோமே. எவ்வளவு இன்பமாக இருந்தது. தங்கள் வருகை தம்பிகட்கும் எனக்கும் ஒரு புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் தந்திருக்கிறது. உலகின் எம் மூலையில் இருவர் சந்தித்து உரையாட நேரினும் அது பயனுடையதாக இருந்தால் ஒவ்வொருவரும் எவ்வளவு நலமடைவார்கள்' என்றனர் என் அன்னையார். 'செவிச் செல்வம் இல்லையேல் ஒரு மனிதனின் வாழ்வு நன்கு அமைய முடிவதில்லை. இது பேரறிஞர்கள் கண்ட முடிவு நாம் பெற்றுள்ள செல்வங்கள் பல. எல்லாவற்றினுஞ் சிறந்தது காதால் கேட்டு அனுபவிப்பதாகும். பிற செல்வங்கள் நன்மை தருதல் இல்லை ஒருசிலர் தகுதி நோக்காமல் எதையும் கேட்டு விடலாம் என்பார்கள். அவ்வாறு கேட்குங்கால் நன்மை தருஞ் சொற்களன்றித் தீமை தருஞ் சொற்களும் கேட்க வேண்டி வரும். கதவு இல்லா வீட்டில் நுழையாத பொருள் இல்லை. காதும் அவ்வாறே. ஆனால் பிற புலன்களான கண் வாய் முதலியவைகட்குக் கதவுகள் உள்ளன' என்று கூறினர் அண்ணனார். அவரது அயர்ச்சியினை அறிந்தனன்.

'ஐயா! காணக் கூடாதவற்றைக் காண நேரிடின் கண்களை இமைகளால் மூடிக் கொள்ளலாம். உண்ணத் தகாதவற்றை மறுத்து வாயினை மூடிக்கொள்ளலாம். (தீயநாற்றத்தை வெறுத்து மூக்கினை அழுத்திப் பிடித்துக் கொள்ளலாம். அதேபோல் மெய்யினையும் ஏதானும் ஒரு போர்வையால் போர்த்துக் குளிரினைத் தடுத்துக் கொள்ளலாம்) இவ்வாறு வேண்டுதல் வேண்டாமைகளை அறியவும் விலக்கவும் கதவுகள் இல்லா நிலையில் காது அமைந்திருக்கின்றது. 'நாவினை அடக்கியாள வேண்டும்' என்பது உலக வழக்கு. ஆனால் காதினை அடக்கியாளும் அறிவே சாலச் சிறந்தது எனவேதான் நம் பொய்யில் புலவரும்.

''எனைத்தானும் நல்லவை
அனைத்தானும் [கேட்க;
ஆன்ற பெருமை தரும்''

என்று கேட்டலின் நிலையை விளக்கினர். 'நல்லவை' என்னும் சொல்லில் நம் நாட்டம் செல்லுதல் வேண்டும். ஊன்றிப் பார்த்தால் அச் சொல்லால் பல என்பதும் நல்லன என்பதும் கிடைத்திருக்கின்றன. இக் காலத்தில் ஒருவனை ஒருவன் திட்டுகிறான் என்றால் அவ்விடத்தில் ஒரு பெருங் கூட்டத்தையும் அதில் மற்றவர்கள் மிக்க ஊக்கத்துடன் சேர்ந்து அல்லல் படுவதையும் காண்கிறோம். ஆனால், புகழ்ச் சொல், அறிவு சான்ற சொல் நிறைந்த இடத்தில் மக்கட் கூட்டம் சூழ்வதில்லை' என உணர்ச்சி மிகுந்து கூறி நிறுத்தினேன்.

சிறிது ஓய்வு பெற்ற அண்ணனார் 'அன்பும், அருளும், அருங்கலைச் சிறப்பும் உடைய தம்பி! நின் பேச்சு மிக்க நலம் பயப்பதாக இருக்கின்றது. நின்னைப்போன்றே எல்லா இளைஞர்களும் இருப்பாராயின் நம் தமிழ் நாட்டுக்கு ஒரு குறையுமில்லை. ஐயா! நாம் நல்லன என்று எவற்றைக் கேட்க வேண்டும்? நம்மைப் போல் மக்களுள் ஒருவன் இருந்து தவஞ் செய்து நல்லன பெற்றுப் பின் மறந்து தீய வழிச் சென்று அதனால் இன்னல் பல இடையறாது பெற்று நன்மை அடைந்தான் என்றால் அவனைப் பற்றிக் கேட்டல் வேண்டும். இக்காலத்தில் புதுவது புனைந்த கதைகள் வெளிவருகின்றன. அவைகளைக் கேட்டலால் பயன் ஏதேனும் உண்டா? இல்லை. நடவாதனவாகிய அவையும் ஒருவாறு அறிவை வளர்க்கலாம். அறிவு வளர்ச்சி மட்டும் நன்மை பயவாது. அவ்வறிவு வளர்ச்சி ஒழுக்கத்திற்கு உரியதாக வளரவேண்டும். இல்லையெனில் பிறருக்குத் தீமை விளைத்து உடையானுக்கும் சிறிய

நன்மையைத் தரும். தற்காலத்தில் நம்மவர்களுக்குத் திரண்ட சொத்துக்களாக இருப்பவைகள் தீய சொல், தீய எண்ணம், தீய செயல் என்பவைகளே. அன்பரே! பிறரை நாம் நல்ல எண்ணம் முதலியவைகளைப் பெற்றிருக்கிறோம் என நம்பவைக்கலாம். அஃது பயனுடையதா? அன்று. தனித்து ஓரிடத்தமர்ந்து தம்மைப் பற்றி எண்ணிப் பார்த்தல் வேண்டும். பிறருக்கென நடத்தல் மிக மிக இழிந்ததாகும். பின் எப்படி? நமக்கு நாமே நடப்பதுதான் உயர்ந்தது.

"வஞ்ச மனத்தான் படிற்று
ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

என்பது வள்ளுவர் பெருமான் வாக்கு. செவிச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.' எனப் பேசி அயர்ந்தார்.

இதுவரை பேச்சில் ஈடுபட்டு மெய்ம்மறந்திருந்த என் அன்னையார், 'தம்பி! பேசுவது அரிது. அதை விட அரிது பேசுவதைக் கேட்கக் கிடைப்பவர்கள்' என்றனர்.

"ஏது பிழை செய்தாலும்
ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த்
தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு"

எனப் பேசும் சிதம்பர சுவாமிகளின் அருள் கனிந்த பாடலை அமைந்த உள்ளத்துடன் கசிந்து பாடினேன். பின்னர் கேட்டு மகிழ்ந்த எதிராசனார். இன்றைய பொழுதினை வாழ்த்தி எல்லாரிடமும் விடைபெற்றுச் சென்றார். இரவுமணி எட்டானதை என் அண்ணனார்க்குக் கூறி உணவருந்தச் சென்றேன்.

'செவியின் சுவை உணரா மாக்கள், அவியினும் வாழினும் என்'?

சிந்திக்க......?

க. அசலாம்பிகை

உலகம் ஒரு நிலைக்கண்ணாடி. நாம் எவ்விதம் அதன் முன் நிற்கின்றோமோ அதே மாதிரி நம்முடைய தோற்றமும் காணப்படும்

—நேக்கரே.

நீ மகிழ்வாக இராவிட்டாலும் மகிழ்ச்சியுடன் இருப்பது போன்று செயலாற்று, உரையாடு. உன்னுடைய துன்பங்களை எடுத்துரைத்து மற்றவர்களின் மகிழ்ச்சியினைக் கெடுத்து விடாதே.

—எமர்சன்.

கவலையைப் போக்க வல்ல மருந்து இறைவன் மீது நம்பிக்கை கொள்வதுதான். ஆனால், பலர் அம்மருந்தை அருந்த மறுத்துத் தங்களை அறிவாளிகள் என நினைத்துக் கொள்ளுகிறார்கள்.

—வில்லியம் ஜேம்ஸ்.

பிறர்மீது அன்பு செலுத்துவது மேன்மையின் அடையாளமாகும். ஆனால் அதைப் பிறரிடமிருந்து பெறுவது தாழ்மையின் அடையாளமாகும்

— அரிஸ்டாட்டில்

சிறும் பாம்பையும், வாளையும் விட சினமும், காமமும் அபாயகரமானவை.

—சிவானந்தசரஸ்வதி.

சுமையைத் தாங்கி அலுக்காமல் உழைக்க வேண்டும் வெயிலையும் குளிரையும் பாராட்டக் கூடாது. எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். இவை மூன்றையும் கழுதையிடமிருந்து கற்றுக் கொள்.

—சாணக்கியன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் உள் நாட்டுக் குழப்பத்தால் ஏற்படும் விளைவுகளை விலை கொடுத்து வாங்கி வரவேற்க வேண்டியதாயிருக்கும்.

இந் நிலைமை குறித்து இந்திய அரசாங்கப் பிரதிநிதியிடம் ஏற்கனவே அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதால் இந்தியர்களும் அவர்தம் பொருள்கட்கும் ஏதொரு நட்டமும் நேரிடாவகையில் நம் இந்திய அரசாங்கம் உடனடியாக ஆவனவற்றைச் சிந்தித்துச் செய்ய வேண்டுகிறோம்.

'ஆழ்க தீயதெல்லாம்'

'தமிழ் வண்டு'

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம், மதுராந்தகம். (அஞ்)